**OS.No.200/2019 P.W.1-மனோஜ்குமார் 03.11.2025**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கை நானும், என் அண்ணன் மோசஸ்ராஜிம் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கை நாங்கள் ஏன் தாக்கல் செய்துள்ளோம் என்றால் தாவா சொத்தில் ஆழ்துளை குழாய் போடும் போது பிரதிவாதி இடையூறு செய்ததால் நாங்கள் காவல் துறையினரை அனுகினோம். அவர்கள் இது சிவில் வழக்கு என்று நீதிமன்றத்தில் தீர்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் 2வது அயிட்ட சொத்தான சர்வே எண்.804/15-ல் ஆழ்துளை குழாய் போட்டோம். சர்வே எண்.804/15-ல் பிரதிவாதி இடையூறு செய்த நிலையில் நாங்கள் ஏன் முதல் அயிட்ட சொத்தான சர்வே எண்.805/14க்கும் சேர்த்து ஏன் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் அதிலும் அவர் உரிமை கோரினார். என்ன பிரச்சனை செய்தார் என்றால் பொது வழி என்று பிரச்சனை செய்தார். ஆழ்துளை கிணறு போடுவதற்கு தான் வழக்கு தாக்கல் செய்ததாக நான் சாட்சி விசாரணையில் கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. முதல் மற்றும் 2வது அயிட்ட சொத்துக்கள் அருகருகே உள்ளன. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்பதை காட்ட நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, அவர்கள் நீதிமன்றத்தில் தீர்த்து கொள்ள சொன்னதால் ஆவணங்கள் இல்லை. இதற்கு முன்பு காவல் நிலையம் சென்று யார் மீதாவது புகார் கொடுத்துள்ளேனா என்றால் நான் கொடுத்ததில்லை. இந்த வழக்கில் புகார் கொடுப்பதற்கு நான் தான் சென்றேன். போலீசாரிடம் புகார் கொடுத்தார் புகார் மனு ரசீது கொடுப்பார்கள் என்றும், அதை நான் பெற்றேனா என்றும் கேட்டால் போலீசார் என் மனுவை வாங்கிக் கொள்ளவே இல்லை. நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றும், நீதிமன்றத்தை ஏமாற்றி உத்தரவு பெற வேண்டுமென்ற எண்ணத்தில் அவ்வாறு காவல் நிலையம் சென்றதாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் அயிட்ட சொத்தான சர்வே எண்.805/14-ல் ஒரு தண்ணீர் குழாய் இருந்தது என்றால் சரிதான். அந்த குழாய் தற்போது இல்லை, தண்ணீர் வராததால் மூடிவிட்டோம். அந்த குழாய் இணைப்பை அரசிடம் பணம் செலுத்தி பெற்றேன். அவ்வாறு அரசிடம் பணம் செலுத்தி குழாய் இணைப்பை பெற்றேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தற்போது சாட்சியிடம் அவர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை காட்டி அதில் எந்த ஆவணம் குடிநீர் குழாய்

பெற்றதற்கான ஆவணம் என்று கேட்டால் வா.சா.ஆ.11 அந்த ஆவணமாகும். அந்த குடிநீர் இணைப்பை 2007ம் ஆண்டு பெற்றேன். வா.சா.ஆ.11-ல் சர்வே எண்.805/14-ல் குழாய் இணைப்பு தரப்பட்டுள்ளதாக குறிப்பாக உள்ளதா என்றால் இல்லை. 2012க்கு பின்பு தான் சர்வே எண்.805/15 கொடுக்கப்பட்டது. அதற்கு முன்பு பழைய சர்வே எண்.626 ஆகும். சர்வே எண்.626 முழுவதும் எனக்கு சொந்தமானது என்றால் இல்லை. சர்வே எண்.626-ன் முழு அளவு தெரியாது. தாவா முதல் அயிட்ட சொத்தான சர்வே எண்.805/14-ல் ஒரு மின் கம்பம் இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் மின் கம்பம் எதுவுமில்லை. 2வது அயிட்ட சொத்திலும் இல்லை. 1வது அயிட்ட சொத்தில் ஒரு மின்கம்பம் உள்ளது என்றும், அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குரையில் காட்டியுள்ள சொத்து விவரத்தில் மின் கம்பம் இருப்பதாக காட்டியுள்ளேன் என்றால் எனக்கு சொந்தமான மின் இணைப்பு இருப்பதாக தான் காட்டியுள்ளேன். வழக்கு தாக்கல் செய்தது முதல் இன்று வரை மின் ஒயர்கள் பூமிக்கு அடியில் செல்கின்றன. தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களுக்கு முன் ஆவணங்கள் உள்ளனவா என்றால் 1993ம் ஆண்டு முதல் ஆவணங்கள் உள்ளன. அதனை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1வது அயிட்ட சொத்திற்கும் முன் ஆவணங்கள் எனக்கு உள்ளது. அந்த ஆவணத்தை என் தாயார் எனக்கு எழுதிக் கொடுத்தார். அதற்கு முன்பு என் தாயாருக்கு என் தகப்பனார் எழுதிக் கொடுத்தது. அந்த பத்திரமும் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். 1வது அயிட்ட சொத்தில் ஒரு பாதையை காட்டி அதை ஆக்கிரமிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் எங்கள் குடும்பத்திற்குள்ளேயே செட்டில்மெண்ட் பத்திரங்களை எழுதி ஒரு உரிமையை புனைந்துள்ளோம் என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)